தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.
தலைமை இடம் - சென்னை.

| | | |
|---|---|---|
| K.சந்திரசேகரன் | R.சந்திரசேகரன். | E.சித்தையன் |
| தலைவர் | பொதுச்செயலாளர் | நிதிச்செயலாளர் |


சுற்றறிக்கை எண்: 11/2018 26-07-2018

## இளநிலை உதவியாளர் கல்வித் தகுதி மாற்றத்தினை எதிர்த்து நமது வழக்கு.

அன்புடையீர்,

வணக்கம். மின்வாரியத்தில் இளநிலை உதவியாளர் நியமனத்திற்கு காலம் காலமாய் இருந்து வந்த S.S.L.C.கல்வித்தகுதியை வாரிய உத்திரவு எண்:25 நாள்:24-05-2014 ல் பட்டப்படிப்பு என தன்னிச்சையாக மாற்றியதை எதிர்த்து நமது சங்கம் தொடுத்த வழக்குகளின் காரணமாக டிசம்பர் 2017 வரை புதிய கல்வித்தகுதியின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் பொறுப்புக்கு உள்முக மற்றும் நேரடி நியமனங்கள் செய்யப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நாம் தொடுத்திருந்த வழக்கு 23-11-2017ல் சென்னை உயர்நீதிமன்ற தனி நீதிபதியால் தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து 2 நீதிபதிகள் மன்றத்தில் ரிட்அப்பீல் (1736 of 2017) தாக்கல் செய்ததில் 200 இளநிலை உதவியாளர் பொறுப்புகளைத் தவிர்த்து மீதமுள்ளவைகளை தமிழக அரசாணை எண்:100 Energy (B2) Dept. dt: 09-10-2010ல் வெளியிடப்பட்டுள்ள, மின்வாரியத்திலிருந்து டான்ஜெட்கோ, டான்டிரான்ஸ்கோ, டி.என்.இ.பி. லிமிடெட் பணியாளர் மாறுதல் திட்டப்படி, குறிப்பாக, 6(13)ன்படி இதர இளநிலை உதவியாளர் கணக்கு மற்றும் நிர்வாகம் பொறுப்புகளை நேரடி நியமனம் மற்றும் உள்முகத் தேர்வுமூலம் நிரப்பிடலாம் என்று 19-12-2017ல் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த ரிட் அப்பீலின் பிரதான (Main case) வழக்கு எதிர்வரும் 01-08-2018ல் விசாரணைக்கு வரவுள்ளது.

இந்நிலையில் தமிழக அரசாணை 100 நாள்: 09-10-2010ன் பிரிவு 6(13) மின்சார சட்டம் 2003 பிரிவு 133ல் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணிநிலை பாதுகாப்பினை தகர்ப்பதாக உள்ளதாலும், சட்டத்திற்குப் புறம்பாக அரசாணை பிரிவு6(13) அமைந்துள்ளதாலும் அந்தப் பிரிவினையே இரத்துச் செய்திட வேண்டும்! அந்தப் பிரிவில் வழங்கப்படும் அதிகாரத்தின் அடிப்படையில் கல்வித்தகுதியை மாற்றியமைத்த வாரிய உத்திரவு எண்:25, நாள்: 24-05-2014 னை இரத்து செய்திட வேண்டும்! என்ற கோரிக்கையுடன் ஒரு புதிய ரிட் மனுவினை 19204 of 2018. இன்று தாக்கல் செய்து, இம்மனுவினை எதிர்வரும் 01-08-2018 அன்று விசாரணைக்கு வரும் பிரதான வழக்குடன் (ரிட் அப்பீல் 1736/2017) சேர்த்திட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தோம்.

மின்சார சட்டம் 2003 பிரிவு 133ல் தொழிலாளர்களுக்குள்ள பாதுகாப்பினை தாங்கள் பார்வையிடுமாறு வேண்டுகிறோம்.

Section 133. Provisions relating to officers and employees: (1) The State Government may, by a transfer scheme, provide for the transfer of the officers and employees to the transferee on the vesting of properties, rights and liabilities in such transferee as provided under section 131.

(2) Upon such transfer under the transfer scheme, the personnel shall hold office or service under the transferee on such terms and conditions as may be determined in accordance with the transfer scheme.

**Provided that such terms and conditions on the transfer shall not in any way be less favourable than those which would have been applicable to them if there had been no such transfer under the transfer scheme.**

தமிழக அரசாணை எண்:100 நாள்: 19-10-2010 பத்தி 6(1)ல் கீழ்கண்ட பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

6. Transfer of Personnel: **(1) The transfer of personnel shall be subject to the provisions contained in section 133 of the Act and the Tripartite Agreement.**

பத்தி 6(4)ல் கீழ்கண்ட பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

**A Tripartite Agreement shall be signed between Government of Tamil Nadu, Transferee and the Recognised Unions/Associations to set forth the conditions mutually agreed upon to safeguard the interest of the personnel and for smooth implementation of the policy of restructuring.**

பத்தி 6(13)ல் முதல் 3வரிகளில் கீழ்கண்ட பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

**Subject to the provisions of the Act and this Scheme, the personnel shall be governed by the Rules and Regulations framed by the Board existing on the date of Transfer.** ஆனால் பத்தி 6(13)ல் அடுத்து வரும் 8வரிகள் தொழிலாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது.

**The Transferee shall be entitled to modify or frame new regulations governing the conditions of service of personnel transferred to the Transferee under this Scheme,** but the rank, scale of pay, salary, allowances and other pecuniary benefits including terminal benefits after the date of transfer shall not in any way be less favourable than those which would have been applicable to them if there had been no such transfer under the transfer scheme.

சம்பளம், படிகள், ஓய்வூதிய சலுகைகள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. **இதில் பதவி உயர்வுகள், நியமனங்கள், உள்முகத்தேர்வுகள், மாறுதல், விடுப்பு ஆகியவைகள் சேர்க்கப்படவில்லை.** எனவே இது மின்சார சட்டம் 2003 பிரிவு 133 க்கு எதிரானது என்பதால் இதனை இரத்து செய்ய வேண்டும், இந்த வரிகள் தரும் அதிகாரத்தைக் கொண்டு கல்வித் தகுதியை மாற்றிய வாரிய உத்திரவு எண்:25 நாள்: 24-05-2014னை இரத்து செய்திட வேண்டும் என்பது நமது வழக்காகும்.

நமது வழக்கு இன்று விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. நமது கோரிக்கைப்படி 01-08-2018 ல் விசாரணைக்கு வரும் ரிட் அப்பீலுடன் சேர்த்திட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மின்வாரியத்தின் அத்துமீறலை தடுத்து நிறுத்தி தொழிலாளர் நலன்களைப் பாதுகாத்திட இலட்சக் கணக்கான ரூபாய் செலவு செய்து **நமது சங்கம் மட்டும் சட்டப் போராட்டம்** நடத்தி வருகிறது. **இத்தகைய தன்னலமற்ற சங்கத்தைப் போற்றி பாதுகாப்பது மின்சாரத் தொழிலாளர்கள் அதுவும் குறிப்பாக நமது சங்கத்தின் உறுப்பினர்கள், பொறுப்பாளர்களின் கடமையாகும்.**

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர்: மத்திய சங்க பொறுப்பாளர்கள், மண்டலச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள்
வட்டத் தலைவர்கள் மற்றும் கோட்டச் செயலாளர்கள்.

நகல் : செய்தி மடல்.